# தேவனுடைய உண்மையான மிகச்சிறந்த சித்தம்

## 3.5 நிறைவான பெலன்




**வேத வசனம்:** **என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்குப் பெலனுண்டு.**
*பிலிப்பியர் 4:13*

**அறிக்கை:** **பரிசுத்த ஆவியானவரின் வல்லமையால் என்னால் எல்லாவற்றையும் செய்ய முடியும்**

**சத்தியம்:** பயப்படாதே, பெலன் கொண்டு திடமனதாயிரு. பரிசுத்த ஆவியானவரின் மேல் முழுமையாக சார்ந்து இருப்பவர்களால் எல்லாவற்றையும் செய்ய முடியும்.



"பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, தேவனுடைய ஆவியினாலே"
காகம் மற்றும் காட்டு புல்லைப் பற்றிய ஒரு கதை:

*ஒரு முறை ஒரு காகம் தரையில் வந்து அமர்ந்து காட்டுப்புல்லிடம், "நான் என் பழையவைகளை மறந்து புதிய இருதயத்தைப் பெற்றுக்கொள்ள விரும்புகிறேன். இப்போதிலிருந்து உன்னை என் உணவாக்கிக்கொள்ளலாமா?" என்று கேட்டது. "நீ விடாமல் தொடர்ந்து அவ்விதம் செய்வாயானால் எனக்குப் பிரச்சனை இல்லை" என்று காட்டுப் புல் பதில் சொன்னது. காகம் சிலநாட்கள் புல்லை உண்டு பார்த்தது. ஆனால் தொடர்ந்து உண்ண இயலாததால் பறந்து சென்றது.*

### வேதப் பகுதி: ரோமர் 7:15-19

**பாடம்**

**1. எனது நற்குண பற்றாக்குறையை அறிதல்:** தேவனுடைய ஊழியக்காரனாகிய பவுல், தன்னிடம் நல்லவைகள் இல்லை என்பதை அறிந்திருந்தார். அவர் சொன்னார், "வசனம்". (ரோமர் 7:15, 18-19)

**2. எனது பெலவீனத்தை அறிதல்:** பவுல், தான் ஒரு பெலவீனமானவர் என்பதை அறிந்திருந்ததால் முதிர்ச்சியுடனும் வெற்றியுடனும் வாழ தன்னைத்தானே சார்ந்திருக்க விரும்பவில்லை. ரோமருக்கு எழுதிய நிருபத்தில் தேவனுடைய எதிர்பார்ப்புகளுக்கு ஏற்றவகையில் வாழ தான் விரும்புவதாகவும் ஆனால் தன்னால் இயலவில்லை என்றும் அறிக்கை செய்திருக்கிறார். "நான்" குறையவேண்டும் என்றும் கர்த்தர் இயேசு உயரவேண்டும் என்றும் அவர் அறிந்திருந்தார்.

**3. பரிசுத்த ஆவியானவரால் எல்லாவற்றையும் செய்தல்:** "மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன்" என்று யோவேல் 2:29 இல் தேவன் சொல்லியிருக்கிறார். இதுவே தேவனுடைய ஆவியானவர் உலகின் பல பகுதிகளிலும் அசைவாடுகிறார் என்பதற்கு சான்று. இந்த கடைசி நாட்களில் தேவன் வாலிபர்களுக்கும் சிறு பிள்ளைகளுக்கும் சிறப்பான அபிஷேகத்தை வைத்திருக்கிறார் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். அவர்களால் இதுவரை செய்ய இயலாத கடினமான செயல்களையும் இந்த அபிஷேகத்தினால் எளிதாகச் செய்ய முடியும். பவுலைத் தேவன் நேசித்ததால் "எல்லாவற்றையும் செய்யக்கூடிய" வல்லமையுள்ள வேதாகம வீரராக விளங்குகிறார். சுவிசேஷத்தை எண்ணிலடங்கா மனிதருக்கு போதித்ததுடன், வியாதியுள்ளவர்களை சுகமாக்கியும் அநேகரை கரிசனையுடன் விசாரிக்கவும் செய்தார். அவர் முழு ஐரோப்பாவிலும் சத்தியத்தைப் பரப்பினார். (பிலிப்பியர் 4:13)

**4. ஆவியானவரின் ஒரு முறை நிரம்புதல் அல்ல:** பவுல் தூய ஆவியானவராலே நிரம்பியிருந்ததால் அவர் வல்லமையுள்ளவராக வாழ்ந்தார். அவருடைய மகா பெலனுக்கு இதுவே இரகசியம். பவுல் தன்னுடைய விசுவாசிகளை தினந்தோறும் ஆவியினால் நிரம்பியிருக்கும்படி உற்சாகப்படுத்துகிறார். காரணம் தினந்தோறும் ஆவியானவரால் நிரம்பியிருக்கவேண்டியது அவசியம். நாம் பிறருக்கு உதவிசெய்யும்படியாகக் கிறிஸ்து இயேசுவினால் நிறைவான வல்லமையைப் பெற்றுக்கொள்ளுவோம். (எபேசியர் 5:18)

**முடிவுரை:** கர்த்தர் இயேசுவை விசுவாசிப்பவர்கள் முழுமையான வல்லமையைப் பெற்றிருப்பார்கள். காரணம், தூய ஆவியானவர் நம்மை நிரப்பும்போது நாம் பெலன் அடைந்து, பிரச்சனைகளை மேற்கொள்ளவும், மற்றவர்கள் மேல் கரிசனைக் கொள்ளவும், சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவும் இயலும். நாம் தினந்தோரும் தேவ ஆவியினால் நிரம்பியிருக்கும்படி ஜெபிப்போம்.

**ஜெபம் / அழைப்பு:** இன்றைய சத்தியம் நமது இருதயங்களில் எழுதப்படும்படி இயேசுவின் நாமத்தினால் ஜெபியுங்கள்.